10.10.2025 HMOP.No.135/2022 PW1 Name :.பிரியா

குறுக்கு விசாரணை

1. திருமணத்திற்கு பின் குடியாத்தம் பஜனைகோயில் தெரு, காக்காதோப்பு என்ற முகவரியில் குடியிருந்தேன். அதற்கு அருகில் தான் என்னுடைய மாமியார் வீடு இருந்தது. ஒரு வருடம் மட்டும்தான் நானும் என் கணவரும் ஒன்றாக வாழ்ந்தோம். மனுவில் ஒருசில நாட்கள் மட்டும் நல்லமுறையில் வாழ்ந்ததாக கூறியிருந்தால் அது தவறாகும். பஞ்சாயத்து நடந்ததாக கூறுவது கேத்தாண்டபட்டி முருகர் கோவிலில் நடந்தது. ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து நடந்தது. பஞ்சாயத்திற்கு பின்னர் நான் கணவருடன் சேர்ந்து வாழ்ந்தும் பிரச்சனை ஏற்பட்டது.
2. பஞ்சாயத்திற்கு பின் நான் என் கணவருடன் சேர்ந்து வாழாமல் தவறாக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிருரையில் கூறியுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. எதிருரை சங்கதிகளை மறுத்து நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான்தான் என் கணவருக்கு அடிக்கடி மனஉளச்சல் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தாயாரின் துர்போதனையை கேட்டுக்கொண்டு என் கணவர் இடம் வாங்கி வீடு கட்டினால் தான் சேர்ந்து வாழ்வேன் என பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல.
3. வழக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ள தேதி தவறானது என்பதால் மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. தற்போது என் கணவர் குடிபழக்கத்திலிருந்து திருந்தி என்னுடன் நல்லமுறையில் குடும்பம் நடத்த தயராக உள்ளார் என்பதால் அவருடன் சேர்ந்து வாழவேண்டும்

என்றால் சரியல்ல. என்னுடைய இடது கையை என் கணவர் உடைத்துள்ளார். அதற்கு மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை.

4. வழக்கிற்காக அவ்வாறு நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் கணவருக்கு எதிராக தவறான குற்றச்சாட்டு கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 10/10/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.10.10 14:58:51 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.